[1979 பிப்ரவரி 22

(ஆ) TAMIL NADU PAWNBROKERS (AMENDMENT) BILL, 1979.

The Hon. Thiru K. NARAYANASWAMY: Mr. Speaker, Sir, I beg to move for leave to introduce the Tamil Nadu Pawnbrokers (Amendment Bill, 1979.

The motion was put and carried and leave was granted.

The Hon. Thiru K. NARAYANASWAMY: Sir, I introduce the Bill.

Mr. Deputy speaker : The Bill is introduced.

(இ) நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு, 1979-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1979) ஆய்வுக்கு *எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும். " என்று முன்மொழிகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களை ஒரு தரம் பார்த்துவிட்டு இதை முன் மொழிந்து பேசுகிறேன். காரணம், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பொதுவுடைமைப் பூங்காவில் பூத்த வாசனை மிக்க மலராக இந்தச் சட்டப் பேரவை மூலம் தமிழக மக்களுக்கு இதை அறிமுகம் செய்கிறேன் என்பதற்காகத்தான் முதலிலே பேரறிஞர் அண்ணாவைப் பார்க்கிறேன். இன்றிருக்கிற அரசு, தமிழக அரசு, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி நடக்கிற அரசு அண்ணாவின் கொள்கையை இந்த சட்டமன்றத்தில் வைத்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

---

* 1979-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16-ம் தேதியன்று தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.